
https://puthusudar.lk/ puthusudar / புதுசுடர்

# புதுசுடர்

உண்மைக்கே முதலிடம்

10th MARCH 2024 | WWW.PUTHUSUDAR.LK | SUNDAY | ISSUE: 70





# மீண்டும் தொகுதிவாரி நாடாளுமன்றத் தேர்தல்

## தொகுதிவாரியாக -160

## பிரதிநிதித்துவம்-65

மீண்டும் தொகுதிவாரி நாடாளுமன்றத் தேர்தல் முறைமைக்குச் செல்வதற்கு அரசு தயாராகி வருகிறது என்று அறிய முடிகிறது.

02



# ஜனாதிபதிக்கு மொட்டின் ஆதரவு: பின்னர் அறிவிக்கப்படும்

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு மொட்டு கட்சி ஆதரவு வழங்குவதா? இல்லையா? என்று பின்னர் அறிவிக்கப்படும் என்று மஹிந்த ராஜபட்ச ரணிலிடம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியின் இல்லத்தில்

02

# வெளிநாடுகளில் பதுங்கியுள்ள

## பாதாள உறுப்பினர்களுக்கு எதிராக 600 பிடி வராந்துகள்

வெளிநாடுகளில் மறைந்து வாழும்–அங்கிருந்து போதைப்பொருள் வியாபாரம் மற்றும் கொலை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டு வரும் 600 பாதாள குழு உருப்பினர்களை கைது செய்வதற்கு இலங்கை அரசு 600 சிகப்பு அறிவித்தல்களை விடுத்துள்ளன.

அவர்களை கைது செய்து இலங்கைக்கு கொண்டுவருவதற்கு

02

## மத்திய வங்கி சம்பள அதிகரிப்புக்கு

# எதிராகப் போராட்டம்

மத்திய வங்கியின் ஊழியர்களின் சம்பளம் சுயாதீனமாக அதிகரிக்கப்பட்டமைக்கு எதிராக தொழில் சங்கங்கள் பல ஒன்றிணைந்து போராட்டங்களை நடத்துவதற்குத் தீர்மானித்துள்ளன.

இது தொடர்பில் அரச மற்றும் தனியார் தொழில் சங்கங்கள் பல ஒன்றிணைந்து பேச்சில் ஈடுபட்டு வருகின்றன என்று அறிய முடிகிறது.

அதிகரிக்கப்பட்ட சம்பளம் மீண்டும் உடனடியாகக் குறைக்கப்பட வேண்டும் என்பதே இந்தப் போராட்டத்தின் நோக்கம்.



புதுச்சுடர்
www.puthusudar.lk
2024 MARCH 10 - SUNDAY

# தனது குற்றத்தை மறந்து...

இந்த வாரம் அரசியல் அரங்கில் பரப்பாகப் பேசப்பட்ட பல விடயங்களில் ஒன்று முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச வெளியிட்டுள்ள புத்தகம்.

தான் ஜனாதிபதி பதவியில் இருந்து எப்படி விரட்டப்பட்டேன் என்று விவரித்து-அந்த விரட்டலுக்கு சர்வதேச சதிதான் காரணம் என்று தெரிவித்து-அவ்வாறான பல விடயங்களை உள்ளடக்கி அவர் அந்தப் புத்தகத்தை வெளியிட்டிருந்தார்.

அவர் விரட்டப்பட்டமைக்கு சர்வதேச சதியா காரணம் என்பது விவாதிக்கப்பட வேண்டிய விடயம்.ஆனால்,தான் விரட்டப்பட்டது நியாயம்தான் என அவர் ஒப்புக்கொள்ள மறுத்துள்ளார்.

மக்கள் மாதக் கணக்கில் காலிமுகத்திடலில் முகாமிட்டு-கோடா கோ ஹோம் என்ற போராட்ட தளத்தை உருவாக்கி அதன் விளைவாகத்தான் கோத்தா விரட்டப்பட்டார்.

69 லட்சம் வாக்குகளால் தான் ஜனாதிபதியானேன் என்ற மமதை காரணமாக கோத்தா கண்டபடி ஆடத்தொடங்கினார்.நாட்டை நிர்வகிக்கத் தெரியாமல்-பொருளாதாரத்தைக் காப்பாற்றத் தெரியாமல் தடுமாறத் தொடங்கினார்.

தனது தேர்தல் வெற்றிக்காக உதவிய நண்பர்களின் தேவைக்கு ஏற்ப பொருத்தாரத்தை மாற்றி அமைத்தார். அந்த நண்பர்கள் சம்பாதிப்பதற்காக நாட்டு மக்களை பற்றி சிந்திக்காமல்-அவருக்கு வாக்களித்த அந்த 69 லட்சம் மக்களை பற்றியும் சிந்திக்காமல் தான் விரும்பியவாறு ஆடினார்.

நண்பர்களுக்காக சீனி வரியைக் குறைத்தார்.இதனால் அரசுக்கு 1600 கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டது.இதைவிடவும் மோசமாக விவசாயத்துக்கான இரசாயனப் பசளைக்குத் தடை விதித்து இயற்கை பசளைக்கு விவசாயத்தை மாற்றினார்.

இயற்கை விவசாயம் நல்ல விடயம்தான். ஆனால்,எடுத்த எடுப்பில் அதைச் செய்ய முடியாது.இரசாயன விவசாயத்தை செய்துகொண்டே இயற்கை விவசாயத்தை மேற்கொள்ள வேண்டும் என்று விவசாய நிபுணர்கள்-விவசாயிகள் உள்ளிட்ட பலரும் கூறியபோதும் அதை கோத்தா காதில் வாங்கவில்லை.

ஏதோ விவசாயத்தில் பாரிய புரட்சி செய்யப்போவதாகக் கூறிக்கொண்டு சிறுபிள்ளைத்தனமாக நடந்துகொண்டார்.இதனால் முழு விவசாயமும் பாதிப்புக்குள்ளானது.இயற்கை பசளையை சில விவசாயிகள் பாவித்தபோதும் அது வெற்றியளிக்கவில்லை.விளைச்சல் கடுமையாகப் பாதிக்கப்பட்டது.

உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. பொருட்களின் விலைகள் உயரத் தொடங்கின.விவசாயிகள் வருமானத்தை இழந்தனர்.இதனால் வீதிக்கு இறங்கிப் போராடினர்.

அத்தோடு,மேலும் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியதும் டொலருக்குத் தட்டுப்பாடு.இதன் காரணமாக எரிபொபொருளை இறக்குமதி செய்வதற்கு டொலர் இல்லை. எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது.

பொருளாதாரத்தின் மூல சக்தியான எரிபொருளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டதால் எல்லாத் துறைகளும் முடங்கின. மின் வெட்டு ஏற்பட்டது.ஒரு நாளைக்கு 12 மணித்தியாலத்துக்கும் மேலாக மின்சாரத்தை வெட்ட வேண்டியேற்பட்டது.

மின்சாரம் இல்லாததால் எல்லா தொழில்சாலைகளும் மூடப்பட்டன. மக்கள் கேஸ/க்கும் எரிபொருளுக்கும் இரவு பகலாக எரிபொருள் நிலையங்களில் வரிசைகளில் நின்றனர்.இதனால் பல மரணங்களும் நிகழ்ந்தன.

எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக-அதனால் உண்டான மின்வெட்டு காரணமாக பொருட்களின் உற்பத்திகள் குறைந்து பொருட்களின் விலைகள் கிடுகிடுவென உயரத் தொடங்கின.

மக்கள் ஒரு பக்கம் தொழில்களை இழந்துகொண்டு செல்ல மறுபக்கம் பொருட்களின் விலைகள் அதிகரிக்கத் தொடங்கின.எல்லாமே மக்களின் கழுத்தை நெருக்கத் தொடங்கின.

இதனால் நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து கோத்தாவை விரட்டுவதற்குக் களமிறங்கினர். விரட்டினர்.இதுதான் நடந்தது.உலகமே அறிந்த விடயம்.

ஆனால்,இப்போது வந்து தான் செய்யாத ஒரு குற்றத்துக்காக தன்னை சர்வதேசம் விரட்டியது என்று புலம்புகிறார்.தான் செய்த குற்றத்தை அப்படியே மூடி மறைத்துவிட்டார்.

இந்தப் புலம்பலை கேட்பதற்கும் அனுதாப்படுவதற்கும் இப்போது மக்கள் தயாரில்லை.அவர் விரட்டப்பட்டதை மக்கள் சந்தோசமாக ஏற்றுக்கொண்டுள்ள நிலையில் இந்தப் புலம்பலை ஏற்பதற்கு எவரும் தயாரில்லை.

## சஜித்துடன்...

(முன்பக்கத் தொடர்ச்சி..)

அதன்படி தொகுதிவாரியாக 160 எம்பிக்களும் பிரதிநிதித்துவ அடிப்படையில் 65 எம்பிக்களும் தெரிவாகும் வகையில் அரசமைப்பைத் திருத்துவதற்கு அரசு திட்டமிட்டுள்ளது என்று அரச வட்டாரம் தெரிவிக்கிறது.

இதற்காக அமைச்சரவை உப குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. தற்போது நாடாளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சி தலைவர்கள் மற்றும் ஏனைய தரப்பினரின் ஆலோசனைகள் உள்வாங்கப்பட்டு அவை அறிக்கையாகத் தயாரிக்கப்பட்டு அந்த அறிக்கை இந்த உப குழுவால் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இது தொடர்பிலான அடுத்த கட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று அறிய முடிகிறது.

# லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் gastroenterology பிரிவு








(கியாஸ் ஏ. புஹாரி, அஷ்ரப் ஏ சமத்)

இலங்கையில் பிறந்த குழந்தை முதல் 14வயது வரை கெஸ்ரிக், gastroenterology குடல் இறக்கம் நோய் 2022 ஆண்டு காலத்திலிருந்து கொழும்பு லேடி றிஜ்வே சிறுவர் வைத்தியசாலையில் இதற்கான சிகிச்சை நிலையம் இயங்கி வருகின்றது. இதற்காக கடந்த புதனன்று இவ் வைத்தியசாலை உள்ள சிறுவர் வைத்திய நிபுணர்கள், ஊடகவியலாளர்களுக்கு தெளிவுபடுத்தும் நிகழ்வு இடம்பெற்றது.

இந் நிகழ்வுக்கு இத்துறை சம்பந்தமான கொழும்பு பல்கலைக்கழகத்தின் மருத்துவ பீடத்தின் பேராசிரியர் சமன் ரன்டிராஜத் இத்துறை சார்ந்த தாதியரும் ஊடகங்களுக்கு தெளிவுபடுத்தினார்.

இதற்காக நிரந்தரமான பரிசோதனைகள். சிகிச்சைகள், வெளிநோயளர் சிகிச்சை மற்றும் சிறுவர்கள் வயிறு நோவு, குடல்இறக்கம் கெஸ்டிக் போன்ற நோய் ஆளாகும் குழந்தைகளுக்கு பெருமளவில் உள்ளதை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ் வகையான குழந்தைகள் வயிற்று நோவு அடிக்கடி அழுதல் போன்ற காரணங்களாகும்.

இதற்காகவே விசேட வைத்திய நிபுணர்களோடு இணைந்து இந் நோயைக் குணப்படுத்துவதற்காக வைத்தியத்துறையின் சிரேஸ்ட விரிவுரையாளரான பேராசிரியர் சமன மற்றும் கலாநிதி சி.வி ரத்சலா ஆகியோர்கள் இணைந்து இலங்கையில் சிறுவர் சிகிச்சையில் செயற்பட்டு வருகின்றனர்.

அதற்கு மேலாக இத்துறையில் சார்ந்த தாதியர்கள், ஆய்வாளர்கள், கிளிக் ஊழியர்கள் அறிக்கையிடுபவர்கள், பயிற்சியளிக்கப்பட்டு கொழும்பு லேடி றிஜ்வே வைத்தியசலையில் குழந்தைகளுக்கு கெஸ்டிக், குடல்இறக்கம், கிளிக் அறை இலக்கம் 39 தெலைபேசி இலக்கம் 0753464313 என்ற இலக்கத்துடன் இவ்வகையான நோய்யுள்ள குழந்தைகளது பெற்றோர்கள் அழைப்பினை எடுத்து சிகிச்சியை பெற்றுக் கெள்ளமுடியும்.

சாதாரனமாக தனியார் வைத்தியசாலையில் upper Gastoenrology 1 இலட்சம் மேலும் Lower Gastoenrology 1இலட்சத்து 30 ஆயிரம், குழந்தை சுகாதார பராமரிப்பு 65 ஆயிரம் என அறவிடப்படுகின்றது. ஆனால் இச் சேவை இங்கு இலவசமாகவே வழங்கப்படுகின்றது. இருந்தும் சில வைத்திய சிகிச்சை மருந்து வைகைகள் வெளியில் இருந்தே பணம் செலுத்தி வாங்க வேண்டி ஏற்படும்.

## ஜனாதிபதிக்கு..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஜனாதிபதிக்கும் மஹிந்த மற்றும் பசில் ஆகியோருக்குமிடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மஹிந்த இவ்வாறு கூறினார்.

ஒன்றரை மணி நேரம் இடம்பெற்ற இந்தச் சந்திப்பின்போது பல விடயங்கள் பேசப்பட்டன.குறிப்பாக,அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்தல் மற்றும் அதிகார பகிர்வு ஆகிவற்றுக்கு பின்பற்றப்படும் கொள்கை மொட்டு கட்சியின் நிலைப்பாட்டுக்கு எதிரானது என்று மஹிந்தவும் பசிலும் ரணிலிடம் கூறினர்.

மேலும்,இரண்டு தரப்பும் ஒன்றிணைந்து செயற்படுவதற்குத் தடையாக இருக்கின்ற நடவடிக்கையில் இருந்து விலகி நிற்பது நல்லது என்று அவர்கள் இருவரும் தெரிவித்தனர்.


அப்படித் தடையாக இருப்பவர்கள் யார் என்று ஜனாதிபதி அவர்களிடம் கேட்டபோது அவர்கள் பதில் ஏதும் கூறாமல் சிரிப்பை மாத்திரம் வழங்கியுள்ளனர்.

## வெளிநாடுகளில்..

(முன்பக்கத் தொடர்ச்சி..)

ஏதுவாக இராஜதந்திர மட்டத்தில் அந்தந்த நாடுகளின் அரசுகளுடன் இலங்கை அரசு பேச்சில் ஈடுபட்டு வருகிறது என்று பாதுகாப்புத் தரப்பு வட்டாரம் தெரிவித்துள்ளது.



# எல்லாம் தமிழர்களின் வாக்குகளுக்காக...!!!

**இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.**

இலங்கையின் அரசியல் தளத்தில் இப்போது அதிகம் பேசப்படுகின்ற விடயங்களுள் 13 ஆம் திருத்தச் சட்டத்தில் அடங்குகிற பொலிஸ் அதிகாரமும் ஒன்று.

இந்த பொலிஸ் அதிகாரத்தை 13 இல் இருந்து முற்றாக நீக்கும் தனிநபர் பிரேரணை ஒன்றை உதய கம்மன்பில எம்பி நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ளார்.

இந்தப் பிரேரணைக்கு ஏற்றவாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் இப்போது கருத்துத் தெரிவித்துள்ளார். பொலிஸ் அதிகாரம் தவிர்த்து அனைத்து விடயங்கள்பற்றி பேசுவதற்குத் தயார் என்று கூறியுள்ளமைதான் அது.

அரசியல் தீர்வு குறித்து திடீரென பேசுவதும்–அதற்காக அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிப்பதும்–பின்னர் அப்படியே விட்டுவிடுவதும் ரணிலின் இயல்பு.அந்த வரிசையில்தான் இப்போதும் ஜனாதிபதி பேசியுள்ளார்.

அவர் ஜனாதிபதியானதும் இந்தப் பேச்சைத் தொடக்கி வைத்தார்.தமிழ் கட்சிகளை அழைத்துப் பேசினார்.

அவர் இந்தியா சென்று இந்திய பிரதமர் மோடியை சந்தித்துவிட்டு வந்தததும் இந்தப் பணியைத் துரிதப்படுத்தினார்.பேச்சு அதிகமானது.

இலங்கைக்கு இந்தியா எந்தவோர் உதவியை செய்வதற்கு முன்வந்தாலும் அந்நாடு முதலில் விதிக்கும் நிபந்தனையாக இருப்பது அல்லது கோரிக்கையாக இருப்பது 13ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்மாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

அது இந்தியாவின் தலையீட்டால் கொண்டுவரப்பட்டது என்பதால் அந்த முறைமை இலங்கையில் இருக்க வேண்டும் என்று இந்தியா விரும்புகிறது.

அந்த முறைமையால் வடக்கு–கிழக்கு பிரச்சினை தீருகிறதா இல்லையா என்பதை விட தனது ஆதிக்கத்துக்கு சான்றாக 13 என்றென்றும் நிலைத்திருக்க வேண்டும் என்பது இந்தியாவின் நிலைப்பாடாகும்.

அந்த வகையில்தான் இந்தியா சென்ற ஜனாதிபதியிடம் 13 ஐ நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற அழுத்தத்தை இந்திய பிரதமர் நரேந்திர மோடி கொடுத்திருந்தார்.

அதனால் இந்தியாவில் இருந்து திரும்பிய வேகத்திலேயே ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க சர்வகட்சி மாநாட்டை கூட்டினார்.வடக்கு–கிழக்கிற்கு பொலிஸ் அதிகாரங்களைத் தவிர எல்லாவற்றையும் வழங்கப் போவதாக அறிவித்தார்.

இதை நடைமுறைப்படுத்தும்போது தெற்கில் இருந்து–சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு வந்தால் அதை சமாளிப்பதற்காக–அதில் இருந்து தப்புவதற்காக ரணில் 13 இன் பொறுப்பை நாடாளுமன்றத்திடம் ஒப்படைத்தார்.

13 என்பது ஜனாதிபதியுடன் தொடர்புபட்ட ஒன்றல்ல நாடாளுமன்றத்துடன் தொடர்புபட்டது. அதை நடைமுறைப்படுத்துவதா இல்லையா என்று நாடாளுமன்றமே தீர்மானிக்க வேண்டும் என்று கூறி ஜனாதிபதி பந்தை அந்தப் பக்கம் திரும்பினார்.

இது தொடர்பில்–13 ஐ அமுல்படுத்துவது தொடர்பில் கட்சித் தலைவர்கள் அவர்களின் யோசனைகளை சமர்ப்பிப்பதற்கு 2 வார கால அவகாசமும் வழங்கியிருந்தார் ஜனாதிபதி.

ஒருவேளை,நாடாளுமன்றத்துக்குள் 13 இற்கு எதிரான நிலைப்பாடு அதிகமாக இருந்தால் நாடாளுமன்றத்தின் தலையில் போட்டுவிட்டு தமிழ் மக்களிடமிருந்து ரணில் தப்பிவிடுவார்.

ஒருவேளை,13இற்கு ஆதரவான நிலைப்பாடு அதிகமாக இருந்தால்–அதை சிங்கள மக்கள் எதிர்த்தால் அதையும் நாடாளுமன்றின் தலையில் போட்டுவிட்டு சிங்கள மக்களிடமிருந்து தப்பிவிடுவார்.

இந்தியாவுக்கும் இதே வேலையைச் செய்வார்.இதனால் 13 இன் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது.13 அமுல்படுத்தப்படுமா ? செயலற்றுக் கிடக்கும் மாகாண சபைகளை மீண்டும் இயக்குவதற்காக தேர்தல் நடத்தப்படுமா என்ற கேள்விகள் இப்போது எல்லோரது மனங்களிலும் எழுந்துள்ளன.

உண்மையில் 13 ரணிலுக்கு இப்போது தேவைப்படுவது வடக்கு–கிழக்கு தமிழர்களின் வாக்குகளை அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் பெற்றுக்கொள்வதற்காகத்தான்.இல்லையென்றால் அவரும் இதுபற்றிப் பேசமாட்டார்.

பொருளாதாரரீதியில் நாடு வீழ்ந்து கிடக்கும் இந்த நிலையில் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்கே கவனம் செலுத்த வேண்டும்இப்போது அதிகாரப் பகிர்வுபற்றியெல்லாம் பேச முடியாது என்று கூறிவிட்டு ரணில் சென்றிருப்பார்.

அடுத்த ஜனாதிபதி தேர்தல் அவருக்கு கடும் சவாலாக அமைந்துள்ளதால் வடக்கு–கிழக்கு தமிழர்களின் வாக்குகள் அவருக்கு கட்டாயம் தேவை. அதனால்தான் இந்தப் பொருளாதார நெருக்கடிக்குள்ளும் அரசியல் தீர்வுபற்றி பேசுகிறார்.அதற்கான செயற்பாடுகளை முடுக்கிவிட்டுள்ளார்.



இருந்தும்,இது ஒரு நாடகம். ஜனாதிபதி தேர்தலில் தமிழர்களின் வாக்குகளை குறிவைத்த செயற்பாடு என்று உணர்ந்ததால் கஜேந்திரன் பொன்னம்பலத்தின் கட் சி இந்த வேலைத்திட்டத்திற்குள் வரவில்லை. அவர்கள் விலகி நிற்கிறார்கள்.

அதேபோல்தான் மொட்டு கட்சியும். அவர்களும் 13 அமுல்படுத்துவத்தைக் கடுமையாக எதிர்க்கிறார்கள்.மக்களால் தெரிவு செய்யப்படாத ஜனாதிபதிக்கு இதை அமுல்படுத்தும் அதிகாரம் இல்லை என்கிறார்கள்.

இந்த நிலையில்தான் 13ஐ அமுல்படுத்துவது தொடர்பில் மீண்டும் பேசியுள்ளார் ரணில்.அதிலும் முக்கியமாக பொலிஸ் அதிகாரமற்ற 13 ஐ வழங்குவதுபற்றிப் பேசியுள்ளார்.இதை தமிழ் தரப்பு விரும்பாது.

மறுபுறம்,பொலிஸ் அதிகாரம் இல்லாமல்கூட 13ஐ அமுல்படுத்துவதை மொட்டு கட்சி எதிர்க்கிறது.

ஆகவே,13 இன் அமுல் என்பது சிக்கலான ஒன்றாகும்..அதைப்பற்றி சும்மா பேசி பேசியே காலத்தைத் தள்ள வேண்டயதுதான்.

# புனித ஹஜ்
# HAJJ 2024
## ஹஜ்ஜுக்கான புதிவுகள் ஆரம்பம்




**36** வருட ஹஜ் உம்றா அனுபவத்துடன் இம்முறை புனித ஹஜ்ஜிற்காக அல்ஹாஜ் சையாப் அன்வர் அவர்களின் கண்காணிப்பில் ஹாஜிகளை அழைத்துச்செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது

**சப்ரா ட்ரவல்ஸ் & டுவர்ஸ்.**

**அஸீஸியா செல்வதில்லை மக்காவில் தங்குவது**

ஹஜ் பெகேஜில் அடங்குபவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- மினாவில் B Category Tent, தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விசா மற்றும் விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சிறப்பான சேவை.

**நீங்கள் எதிர்பாராத நியாய கட்டணம், நிறைவான சேவை**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

**அல்ஹாஜ் சையாப் அன்வர்**
**0775046995 I 0777667152**
**அல்ஹாஜ் ஜாபிர் - 0767007391**

## Safra Travels & Tours (Pvt) Ltd

FLG - 4, Dias Place, Gnasinghapura, Colombo -12.
Tel: (0094) 0112 335699 I Fax: 0112335043
E- mail: safra_travels@yahoo.com



# HAJJ PILGRIMAGE 2024
# புனித ஹஜ்

47 ஆண்டுகால அனுபவமும், முத்த உலமாவும் ஹாஜிகளுக்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்து ஹஜ் உம்றாவுக்கு வழிகாட்டும் அல்ஹாஜ் மவ்லவி ஏ.எல்.எம்.கலீல் மதனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் ஹஜ்பயணிக்கும் வாய்ப்பு

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

As Sheikh M A M Masooth Ahmed (Hashimi) JP
077 9000 115
(Kattankudy)

As Sheikh M A Ibrahim (Gafoori)
077 42 39 389
(Colombo)

Al Haj Mishab JP
077 400 8485
(Negombo)

**நியாய கட்டணம், நிறைவான சேவை, நேர்த்தியான வழிகாட்டல்**

மேலதிக விபரங்களுக்கு:

**+94 777 909 377 I +94 777 918 978**

## BURAQUE TRAVELS (PVT) LTD

+94 11 267 8811
Info@buraque.lk
62,Dematagoda Road, Colombo -09 Sri Lanka

In Service Over 3 Decades

# ஹஜ்
# HAJJ 2024
## வாழ்நாளில் மறக்கமுடியாத பயணம்



**Our Services**

- Accommodation in Makkah ( 5 Star Hotel - Clock Tower) in Madinah ( 4 Star Hotel ) in Mina Tent - B Category
- Sri Lankan Meals
- Luxury Ground Transport
- Visa with Insurance and Air Ticket
- Guidance By Ashsaik Suib Deeni

Luxury Package
Short Package




தரமான சேவையுடன் அஷ்ஷேக் சுஐப் தீனி அவர்களின் நேரடி வழிகாட்டலில் புனித ஹஜ்ஜை பூரண திருப்தியுடன் நிறைவேற்ற காலம் தாழ்த்தாமல் தொடர்புகொள்ளுங்கள்

For further details, contact:
**Alhaj Askar Aunn - 0777 03 15 23**
**Alhaj Aunn - 077 55 42 660**

## The Global Travels & Leisure Pvt Ltd

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்
No.653, Maradana (Next to Sampath Bank ) Colombo 10
Tel: 0117221876 I 0117221720 E-mail: askar@theglobal.lk

# புனித ஹஜ் 2024



இம்முறை புனித ஹஜ்ஜிற்காக ஹாஜிகளின் நலன் கருதி 3 பெகேஜ்களில் அழைத்துச் செல்ல அனைத்து ஏற்பாடுகளையும் மிக சிறப்பாக செய்திருக்கிறது.

**PAKAGE -A: 20,95,000/-**
முஅல்லிம் - B

**PAKAGE -B: 16,95,000/-**
முஅல்லிம் - C , Clock Tower

**SORT PAKAGE -B: 18,95,000/-**

நாம் வழங்கும் சேவை

- மக்கா மதீனாவில் நட்சத்திர ஹோட்டலில் தங்குமிடவசதி
- தரைமார்க்க போக்குவரத்து
- இலங்கை உணவு மற்றும் சிற்றுண்டி
- சரித்திர முக்கியத்துவமிக்க இடங்களை தரிசித்தல்
- விமானப்பயண டிக்கட்
- அனுபவமுள்ள உலமாக்களின் வழிகாட்டல் என அத்தனையும் சொல்வதைப்போல் செய்யப்படும்.

**ரமழான்**
இறுதி 15 நாட்கள் உம்றா பெகேஜ்:
**749,000/-**

எனவே காலம் தாழ்த்தாமல் உடன் பதிவுக்கு முந்துங்கள்!

மேலதிக விபரங்களுக்கு:
அல்ஹாஜ் மௌலவி பைசல் பின்னூரி - **0777141151**
அல்ஹாஜ் மௌலவி ஸகரியா இனாமி - **0777151156**

# பின்னூரியா

ஹஜ் உம்றா சேவை நிறுவனம்

**BINNOORIYA HAJJ UMRAH SERVICE**

#204/01, Grandpass Road,Colombo-14. and Asna Super Market, Akurana.





# கணக்கில் எடுக்காத எம்பிக்கள்

தான் சதி மூலம் ஜனாதிபதி பதவியில் இருந்து விரட்டப்பட்டேன் என்று தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி கோத்தாபே ராஜபக்ச புத்தகம் ஒன்றை வெளியிட்டார் அல்லவா.

அந்தப் புத்தகத்தை மொட்டு எம்பிக்கள் பலர் கணக்கில் எடுக்கவில்லையாம்.

அவர்களிடம் இந்தப் புத்தகம் பற்றிக் கேட்டால் ,சொல்பேச்சு கேளாமல் நாட்டின் பொருளாதாரத்தை அதலபாதாளத்துக்குத் தள்ளி-கட்சியையும் வீழ்ச்சியடையச் செய்தவர் இப்போது வந்து புலம்புவதில் அர்த்தமில்லை.

அவரது புத்தகத்தை-அவரது புலம்பலை நாம் கணக்கில் எடுக்கவில்லை என்கிறார்கள் அந்த எம்பிக்கள்.

இத்தனைக்கும் அவர்கள் முகஸ்துதிக்காக அந்தப் புத்தக விழாவில் கலந்துகொண்டவர்கள்தான்.

# அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா...



மனோகணேசனின் கூட்டமைப்பில் எம்பியாக இருந்தவர் அரவிந்த குமார்,அவர் அரசுடன் இணைந்து அமைச்சரானார்.

அவருக்கு எதிராக நடவடிக்கை எடுத்து அவரை கட்சியில் இருந்து நீக்கினார் மனோகணேசன்.

அதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சக்தியின் கூட்டணி கட்சிகளுக்கான கூட்டம் ஒன்று மறுநாளே இடம்பெற்றது.

அதில் மனோகணேசன் கலந்துகொண்டபோது அவர் எடுத்த அந்தத் தீர்மானத்தை அங்கிருந்தவர்கள் வரவேற்றனர்.

அந்தத் தீர்மானத்தை முதலில் கைதட்டி வரவேற்றவர் ஹறின் பெர்னாண்டோதான்.. கட்சி தாவுபவர்களுக்கு எதிராக இப்படித்தான் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கூறினார்.

கூறி சில நாட்களிலேயே ஹறீனும் அரசுடன் சேர்ந்துகொண்டார்.அப்போ ஹறீன் பேசிய பேச்சு..???

அரசியலில் இதெல்லாம் சகஜமப்பா...




# குடுவுக்குத் தட்டுப்பாடாம்



அண்மையில் மொட்டு எம்பிக்கள் ஜனாதிபதியுடன் சந்திப்பை ஏற்படுத்தியபோது போதைப்பொருளை ஒழிக்கும் யுக்திய வேலைத்திட்டம் பற்றிப் பேசினர்.

இந்தத் திட்டம் காரணமாக இப்போது 10 ஆயிரம் ரூபாவுக்குக் கூட குடு வாங்குவதற்கு இல்லை என்று மஹிந்தானந்த அழுத்கமே கூறினார்.

அதுமட்டுமல்ல,பிடிபடும் குடுவை கோல்பேசில் வைத்து அழிக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

இதுவரை ஒரு லட்சம் கிலோ குடு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் டிரான் அலஸ் கூறினார்.





# சு.கவுக்குள் நுழைந்த உளவாளிகள்

சிறிலங்கா சுதந்திர கட்சி பற்றியும் அதன் தலைவர் மைத்திரிபால சிறிசேன பற்றியும் தகவல்களை சேகரிப்பதற்காக நவ லங்கா சுதந்திர கட்சியின் உறுப்பினர்கள் பலர் சு.கவுக்குள் நுழைந்துள்ளார்கள் என்று சு.க உள்ளக வட்டாரம் தெரிவிக்கிறது.

அதாவது சந்திரிகாவின் ஆசிர்வாதத்துடன் குமார வெல்கமவால் உருவாக்கப்பட்டுள்ள இந்த கட்சியின் செயலாளராக இருப்பவர் பேசல ஜயரத்ன.

பேசலவின் உறவினர் ஒருவர் இப்போது மைத்திரியுடன் நெருக்கமாகி இருக் கிறார். அவரை மைத்திரியுடன் இணைத்து பேசலதானாம்.

அவர் மைத்திரி பற்றிய தகவலை பேசலவுக்கு வழங்கிக்கொண்டு இருக்கிறாராம்.நவ லங்கா சுதந்திர கட்சியின் மேலும் பல உறுப்பினர்களையும் சு.கவின் வெவ்வேறு பிரிவில் பேசல இணைத்துள்ளாராம்.அவர்களும் பேசலவுக்குத் தகவலை வழங்கி வருகிறார்கள் என்று சு.க வட்டாரம் கூறுகிறது.



# சஜித்தைப் பொது வேட்பாளராக்குவதற்கு...

ஐக்கிய மக்கள் சக்தியுடன் சுதந்திர மக்கள் சபையின் எம்பிக்கள் பலர் இணைந்து செயற்படுவது நாம் அறிந்ததே.

அதிலும் டிலான் பெரேரா சற்று தீவிரமாக நிற்கிறாராம்.சஜித்தை எப்படியாவது ஜனாதிபதியாக்கிவிட வேண்டும் என்பதில் அவர் குறியாக இருக்கிறாராம்.

அதற்கு ஒரே வழி சஜித்தை பொது வேட்பாளராக நிறுத்துவதுதான் என்று கருதும் அவர் அதற்கான வேலையில் இப்போது தீவிரமாக இறங்கியுள்ளாராம்.



# சஜித்தின் நால்வருக்கு அமைச்சுப் பதவியாம்

சஜித் தரப்பு எம்பிக்கள் பலர் ஜனாதிபதியுடன் ரகசிய தொடர்பு வைத்திருப்பது உண்மைதான்.அவர்களுள் நால்வருக்கு ஏப்ரல் மாதம் அமைச்சுப் பதவிகள் வழங்கப்படவுள்ளன என்று ஜனாதிபதி தரப்பில் இருந்து அறிய முடிகிறது. இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட ஐக்கிய தேசிய கட்சி உறுப்பினர்கள் கட்சியின் உயர் பீடத்தைத் தொடர்புகொண்டு அந்த நால்வரும் மக்கள் செல்வாக்கு அல்லாதவர்கள் என்றும் அவர்களை இணைப்பதால் கட்சிக்கு எந்த நன்மையையும் இல்லை என்றும் கூறி இருக்கிறார்கள்.

இவர்களை இணைப்பதைவிட ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பது நன்மை பயக்கும் என அவர்கள் மேலும் கூறி இருக்கிறார்கள். ஐக்கிய தேசிய கட்சியின் வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்தியிடம் இருப்பதால் ஐக்கிய மக்கள் சக்தியை இணைப்பதுதான் ஐக்கிய தேசிய கட்சிக்கு பிரயோசனமாக அமையும் என்று அவர்கள் தொடர்ந்து கூறி இருக்கிறார்கள்.

# விலகிச் சென்றவர்களுக்கு வலை..



ஜனாதிபதி தேர்தல் நெருங்க நெருங்க எல்லா கட்சிகளும் அவரவர்களை பலப்படுத்தும் வேலையில் இறங்கியுள்ளன.

அந்த வகையில்,மொட்டு கட்சியும் அதேவேலையில் இறங்கியுள்ளது.

அவர்கள் முக்கியமாக கவனம் செலுத்துவது மொட்டு கட்சியில் இருந்து பிரிந்து சென்றவர்களை மீண்டும் மொட்டுடன் இணைப்பதில்தான்.

அவ்வாறு பிரிந்து சென்று சுயாதீனமாக செயற்படுகின்ற அதிகமானவர்கள் மொட்டுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளார்கள் என்று மொட்டு எம்பிக்கள் பலர் நாமல் ராஜபக்சவிடம் கூறியுள்ளனர்.

உடனடியாக அவ்வாறானவர்களை இணைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு நாமல் அவர்களிடம் கூறி இருக்கிறார்.

குறிப்பாக,ஜீ.எல்.பீரிஸ் மற்றும் டலஸ் பெரும போன்றவர்கள்மீது நாமல் கண் வைத்துள்ளாராம்.

# அமானா வங்கி வரலாற்றில் சிறந்த நிதிப் பெறுபேறு





சவால்கள் நிறைந்த பொருளாதாரச் சூழலிலும் அமானா வங்கி இதுவரையில் பதிவு செய்திருந்த உறுதியான நிதிப் பெறுபேறுகளை 2023 ஆம்ஆண்டில் எய்தியிருந்தது. வங்கியின் மீளாய்வுக் குட்படுத்தப்பட்ட வரிக்கு முந்திய இலாபம் சுமார் இரண்டு மடங்காக அதிகரித்து ரூ. 2.3 பில்லியனாக பதிவாகியிருந்தது.

2022 ஆம் ஆண்டில் பதிவாகியிருந்த ரூ. 1.2 பில்லியனிலிருந்து சுமார் 92% வருடாந்த அதிகரிப்பை பெற்றிருந்தது.2023 ஆம் ஆண்டுக்கான வரிக்கு பிந்திய இலாபம் ரூ. 1 பில்லியன் எனும் பெறுமதியை கடந்து ரூ. 1.4 பில்லியனாக பதிவாகியிருந்தது.

2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 0.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 76% வருடாந்த அதிகரிப்பாகும். பிரதான வியாபாரத்தில் உறுதியான வளர்ச்சியுடன், வங்கியின் நிதிசார் வருமானம் ரூ. 17.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. முன்னைய ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 12.1 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 42% அதிகரிப்பாகும்.

ஆரோக்கியமான நிதியளிப்பு எல்லைப் பெறுமதியான 4.3% ஐ வங்கி பேணியிருந்ததுடன், தேசிய நிதியளிப்பு வருமானமாக ரூ. 6.5 பில்லியனை வங்கி பதிவு செய்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 4.8 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 36மூ அதிகரிப்பாகும்.

கட்டண அடிப்படையிலான வருமானமும் 24% வளர்ச்சியை பதிவு செய்து ரூ. 931 மில்லியனாக பதிவாகியிருந்தது. இதில், எமது பெறுமதி வாய்ந்த வியாபார வங்கியியல் வாடிக்கையாளர்களால் உருவாக்கப்பட்ட வர்த்தகங்கள், டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல்களில் அதிகரிப்பு மற்றும் இதர பெறுமதி சேர் சேவைகள் போன்றன பங்களிப்பு வழங்கியிருந்தன.

உயர் தேறிய வர்த்தக வருமானம் மற்றும் இதர வருமதிகளின் பங்களிப்புடன், வங்கியின் மொத்த தொழிற்பாட்டு வருமானம் ரூ. 9.2 பில்லியனாக உயர்ந்திருந்தது. 2022 ஆம் ஆண்டில் இந்தப் பெறுமதி ரூ. 6.4 பில்லியனாக காணப்பட்டதுடன், இது சுமார் 45% வளர்ச்சியாகும்.

# Prime Groupஇன் புதிய செயற்திட்டம்



மாலபே பகுதியின் செழுமையான சூழலில் அமைந்துள்s Prime Group இன் புதிய செயற்திட்டமான 'Waterfall Residencies" குடும்பத்தாரை சொகுசான வாழ்க்கை வரவேற்றுள்ளது.

இலங்கையின் முன்னணி சொத்துக்கள் வடிவமைப்பாளரான Prime Group Waterfall Residencies இல் விருது வென்ற மற்றும் பரந்த விலாக்களை உள்ளடக்கியுள்ளதுடன், இயற்கைக்கு நட்பான, இரம்மியமான வதிவிடத் தொகுதியாக, மாலபே, சந்திரிகா குமாரதுங்க மாவத்தையை அண்மித்து அமைந்துள்ளது.

5 ஏக்கர் காணியில் அமைந்துள்ள Waterfall Residencies இல், இரண்டு அடுக்கு இடவசதிகளைக் கொண்ட வீட்டு அலகுகள் காணப்படுவதுடன், அவை மூன்று படுக்கை அறைகளைக் கொண்டதாக அமைந்துள்ளன.

இவை வதிவோருக்கு கொழும்பு நகர சௌகரியமான பரந்த ஓய்வான அனுபவத்தை வழங்குவதாக அமைந்துள்ளது. Waterfall Residencies எனும் பெயருக்கமையவே, 100 அடி நீர்வீழ்ச்சி ஏற்படுத்தப்பட்டு, கிறிஸ்டல் குளம் போன்றதொரு அமைப்பை வழங்கி, அதன் அடிப்படையில் பெயரூட்டப்பட்டுள்ளது.

கட்டடக் கலை மற்றும் நிலைபேறான உள்ளம்சங்களுடன், Waterfall Residencies இனால் சொகுசான வாழ்க்கைக்கு புதிய அடையாளம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், சிறந்த குடும்ப இல்லமாகவும் அமைந்துள்ளது.

# செலான் – PickMe கூட்டு




செலான் Accelerate டெபிட் அட்டை வாடிக்கையாளர்களுக்கு பிரத்தியேகமான தள்ளுபடிகளை அறிமுகப்படுத்த இலங்கையின் முன்னணி சவாரிகள் மற்றும் உணவு விநியோக Nritahd PickMe உடன் செலான் வங்கி இணைந்துள்ளது.

இதன் பயனாக, செலான் Accelerate டெபிட் அட்டை வாடிக்கையாளர்கள் PickMe,d; Flex> Mini மற்றும் கார் வகை சவாரிகளில் ரூ.500 வரையிலான 20மூ தள்ளுபடியை அனுபவிக்கலாம். சவாரி நன்மைகளுக்கு மேலதிகமாக, செலான் Accelerate டெபிட் அட்டை வாடிக்கையாளர்கள் ரூ.1250இற்கு மேற்பட்ட PickMe உணவு விநியோக பரிவர்த்தனைகளுக்கு ரூ.250 பெறுமதியான தள்ளுபடியைப் பெறலாம்.

இந்தப் பிரத்தியேக சலுகைகள், ஏப்ரல் 1, 2024 வரை செல்லுபடியாவதால் செலான் Accelerate டெபிட் அட்டை வாடிக்கையாளர்களுக்கு PickMe கூட்டாண்மை மூலம் வழங்கப்படும் சேமிப்பு மற்றும் வசதியைப் பயன்படுத்திக் கொள்ள போதுமான நேரத்தை வழங்குகிறது.

செலான் Accelerate, அதன் Premier Prime Plus மற்றும் Entry அங்கத்துவப் பிரிவுகளுக்கு வெறுமனே வங்கிச் சேவைகள் மட்டுமல்லாது அதிக நன்மைகளை வழங்குகிறது.

அட்டை வாடிக்கையாளர்கள் பிறந்தநாள், திருமணம், ஆண்டுவிழாக்கள் மற்றும் குழந்தைகளின் பிறப்பு போன்ற வாழ்க்கையின் குறிப்பிடத்தக்க மைல்கற்களின் போது சிறப்பு சலுகைகள் மற்றும் ரூ.200,000 வரை பெறுமதியான பணப் பரிசுகளை பெற்றிடலாம்.

# SLTஇன் நிதிப் பெறுபேறுகளில் பாதிப்பு



2023 டிசம்பர் 31ஆம் திகதியுடன் நிறைவடைந்த நிதியாண்டிலும், நான்காம் காலாண்டிலும், SLT குழுமத்தின் நிதிப் பெறுபேறுகள் எதிர்மறையான பெறுமதிகளை பதிவு செய்திருந்தன.

நாட்டில் நிலவிய பெரும் பொருளாதார சவால்கள் நிறைந்த சூழலின் காரணமாக இந்தப் பெறுபேறுகள் பதிவு செய்யப்பட்டிருந்ததாக நிறுவனம் அறிவித்துள்ளது.

2023 ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டில், ளுடுவு குழுமம் முன்னைய ஆண்டின் இதே காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் வருமானத்தில் 7.5% வீழ்ச்சியை பதிவு செய்திருந்தது.2022 ஆம் ஆண்டில் 28 பில்லியன் ரூபாயாக காணப்பட்ட இந்தப் பெறுமதி கடந்த ஆண்டில் ரூ. 26 பில்லியனாக வீழ்ச்சியடைந்திருந்தது.

குழுமத்தின் இலாபத்திலும் வீழ்ச்சி பதிவாகியிருந்ததுடன், செலவு செம்மையாக்கல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு, தொழிற்பாட்டு செலவுகளில் (Opex) 5.9மூ வீழ்ச்சி ஏற்பட்ட போதிலும், நிறுவனத்தின் வருமானத்திலும் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

அதே போன்று, குழுமத்தின் தொழிற்பாட்டு இலாபத்திலும் வீழ்ச்சி பதிவாகியிருந்தது. காலாண்டில் வரிக்கு முன்னைய இலாபம் மற்றும் வரிக்கு பிந்திய இலாபம் ஆகியனவும் வீழ்ச்சியடைந்திருந்தன.

SLT ஐ பொறுத்தமட்டில், 2022 ஆம் ஆண்டின் 4ஆம் காலாண்டுடன் ஒப்பிடுகையில், 2023 ஆம் ஆண்டின் நாலாம் காலாண்டில் 3.6% Opex வீழ்ச்சி பதிவாகியிருந்தது. இதில் ஊழியர்களுக்கான செலவீனங்களை குறைப்பதில் முறையாக நிர்வாக செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தமை முக்கிய பங்காற்றியிருந்தது.

# வெற்றியாளர்கள் கௌரவிப்பு




20 ஆண்டுகளுக்கு மேற்பட்ட பாரம்பரியத்தைக் கொண்ட இலங்கையின் பெருமைக்குரிய வர்த்தக நாமமான தீவா (DIVA), "தீவா கரத்திற்கு வலிமை" தொழில்முயற்சியாண்மைத் திறன் விருத்தி நிகழ்வில் சிறந்து விளங்கிய வெற்றியாளர்களுக்கு 2024 பெப்ரவரி 19 அன்று யாழ்ப்பாணத்தில் விருது வழங்கிக் கௌரவித்தது.

Women in Management (WIM) அமைப்புடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்நிகழ்ச்சித்திட்டம் பெண் தொழில் முயற்சியாண்மையையும் திறன் விருத்தியையும் மையமாகக் கொண்ட விரிவான பயிற்சி அமர்வுகளை உள்ளடக்கியிருந்தது.

மிகக் கவனமான மதிப்பீட்டுச் செயன்முறை ஒன்றின் பின்னரே குறித்த பயிற்சி அமர்வுகளில் ஆகச் சிறந்து விளங்கிய நான்கு தொழில் முனைவோருக்கு இந்நிகழ்வில் விருது வழங்கப்பட்டது.

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிக்கு அனைவரும் முகங்கொடுத்துவரும் நிலையில் சிறிய மற்றும் நடுத்தர அளவிலான வணிகங்களில் ஈடுபடும் தொழில்முனைவோர், நாட்டின் பொருளாதாரத்துக்கு கணிசமான பங்களிப்பை வழங்கி நாட்டை பொருளாதார வளர்ச்சியை நோக்கி வழிநடத்தும் சக்தியாக உருவெடுத்துள்ளனர்.

# உலகில் முதலாவதாக மெய்நிகர் சுற்றுலா முறையை அறிமுகம் செய்த சவூதி

(எழுத்து– காலித் ரிஸ்வான்)

சவூதி கலாச்சார அமைச்சு உலகின் முதல் தேசிய கலாச்சார மெட்டாவெர்ஸ் தளத்தினை கடந்த வெள்ளிக்கிழமை அறிமுகப்படுத்தியது.





இது பயனர்களுக்கு மெய்நிகர் (Virtual Reality) வரலாற்று, உல்லாசப் பயணங்களில் பங்கேற்க உதவுகிறது. மெட்டாவெர்ஸ் இன் இந்த அற்புதமான கண்டுபிடிப்பானது ஜெனரேட்டிவ் மீடியா இன்டலிஜென்ஸ் (GMI) எனும் செயற்கை நுண்ணறிவு அமைப்பு மூலம் மேம்படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது.

GMI உடன் இணைந்து ஹைப்பர்லெட்ஜர் ஃபேப்ரிக் 2.5 பிளாக்செயின் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி droppGroup மற்றும் 'phygital' metaverse உடன் இணைந்து உருவாக்கப்பட்டுள்ள இந்த அற்புதமான தளம் மெய்நிகர் ஆய்வு மற்றும் அத்துறையில் பெரும் புரட்சியை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

சவூதி ஹெரிடேஜ் மெட்டாவர்ஸ் தளமானது எண்ணற்ற வசீகர அனுபவங்களை பயனர்களுக்கு வழங்குகிறது. சவூதி அரேபியாவின் செழுமையான பாரம்பரியத்தைக் கொண்டாடும் கலாச்சார காட்சிகள் வரலாற்றுச் சுற்றுப்பயணங்கள், இசை நிகழ்ச்சிகள், கலைக் கண்காட்சிகள் மற்றும் சிறு விளையாட்டுகள் முதல் பல்வேறு வகையான செயல்பாடுகளை தூர தேசங்களில் இருந்து நிஜத்தில் அனுபவிப்பதை போல அனுபவிப்பதற்கான சந்தர்பத்தை இந்த தளம் ஏற்படுத்தி தருகிறது.

மேலும் இத்தளமானது சவூதியின் புரட்சிகர தொழில்நுட்ப கண்டுபிடிப்புகளுக்கு ஒரு சான்றாக உள்ளது. இது அன்மைய, சவூதியின் நிறுவன தின சிம்பொனி கச்சேரி போன்ற நிகழ்வுகளின் நேரடி ஒளிபரப்பை வழங்குகியதும் குறிப்பிடத்தக்கது.

இந்த டைனமிக் டிஜிட்டல் சூழலானது மொபைல் போன்கள், ஏசு ஹெட்செட்கள் மற்றும் டெஸ்க்டாப்புகள் உட்பட பல சாதனங்களின் மூலம் அணுகக்கூடியதாக உள்ளது.

சவூதி கலாசாரத்தை சர்வதேச மக்களும் ரசிக்க, அனுபவிக்க வேண்டும் என அந்நாட்டு கலாச்சார அமைச்சகம் விரும்புகிறது. எனவே அவர்கள் உலகில் எங்கிருந்தாலும் கலாச்சார நிகழ்வுகளை அணுகச் செய்வதற்கான முயற்சியாக இது இருக்கிறது.

இந்தப் புதிய முன்முயற்சி, மக்கள் கலாச்சாரத்தை குறிப்பாக ஒன்லைனில் எப்படி அனுபவிக்கிறார்கள் என்பதை பிரதிபலிக்கிறது. மெய்நிகர் அனுபவங்களில் பங்கேற்பதன் மூலம், மக்கள் கலாச்சாரங்களை தம்மிடையே பகிர்வதற்கான புதிய வழியை உருவாக்கித் தருகிறது. இது தொழில்நுட்பம் மற்றும் பாரம்பரியம் இரண்டினையும் இணைக்கும் பாலமாக காணப்படுகிறது.

# நினைவு முத்திரை வெளியீடு




இலங்கையின் முதன்மையான தனியார் துறை வங்கியான HNB PLC, தனது 135ஆவது ஆண்டை வாடிக்கையாளர்கள் மற்றும் வணிகங்களின் நிதி இலக்குகளை அடைவதற்கு ஆதரவளிக்கும் வகையில் தேசத்தின் வங்கி முறையின் மூலக்கல்லாக தனது பாரம்பரியத்தை பலப்படுத்தியது.

இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க தருணத்தில் கருத்து தெரிவித்த உடீயின் முகாமைத்துவப் பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜொனாதன் அலஸ், "HNBஇன் ஆரம்ப காலத்திலிருந்தே, எங்களின் உண்மையான பலம் நமது நிதி வலிமையில் மட்டுமல்ல, நாங்கள் சேவை செய்யும் மக்களுக்கும் – வளரும் சேமிப்பாளர்கள் முதல் செழித்து வரும் SMEகள் வரை உள்ளது என்பதை HNB அங்கீகரித்துள்ளது.

"கெமி புபுதுவ" போன்ற முயற்சிகள், சமூகங்களுக்குள் நம்மை இணைத்துக்கொள்வதற்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்தின் அடிப்படையில் உறவுகளை வளர்ப்பதற்கும், பகிர்ந்த செழுமைக்கும் எங்களின் அர்ப்பணிப்பை எடுத்துக்காட்டுகின்றன.

முழுவதும், உடீ நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக, சர்வதேச வெற்றிக்கு நுண் வணிகங்களை வழிநடத்தி, இலங்கையின் தொழில் முயற்சியின் உறுதியான உணர்வை வெளிப்படுத்துகிறது.

மேலும், நமது கடந்தகால சாதனைகளில் இருந்து உத்வேகம் பெற்று, நாளைய வாய்ப்புகளைத் எட்டுவதன் மூலம், முன்னோக்கிய பயணத்தை ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்." என தெரிவித்தார்.

# இணைய அனுபவங்களை மேம்படுத்தும் Airtel

உள்ளடக்க விநியோக வலையமைப்பு (Content delivery network - CDN) சேவை வழங்குநரான 'DataCamp Limited' உடனான தொலைத்தொடர்பின் முக்கிய கூட்டாண்மையைத் தொடர்ந்து Airtel Lanka பாவனையாளர்கள் குறிப்பிடத்தக்க வகையில் சீரான மற்றும் வேகமான மொபைல் இணைய அனுபவத்தை அனுபவிக்க முடியும்.

இந்த கூட்டாண்மை மூலம், யுசைவநட டுயமெய இப்போது னுயவயஊயஅி இன் CDN77 Caching PlatformI - வன்பொருள் மற்றும் மென்பொருள் தீர்வுகள் உட்பட, அவர்களின் மாளிகாவத்தை மற்றும் கடவத்தை தரவு மையங்களில் – 60புடிள வரையிலான TrafficI கூட்டாக கையாளும் திறனை அவர்களுக்கு கொடுக்கிறது.

CDN77 தரவு மையங்கள் மற்றும் யுசைவநட டுயமெய போன்ற சில மொபைல் ஆபரேட்டர்கள் மத்தியில் Cache Platformfis உலகம் முழுவதும் பயன்படுத்துகிறது. இதன் விளைவாக, இறுதிப் பாவனையாளர்களின் சாதனங்களுக்கு நெருக்கத்தை ஏற்படுத்துகிறது.

இதன் விளைவாக வாடிக்கையாளர்களுக்கு வேகமான, மென்மையான மற்றும் நம்பகமான நெட்வொர்க் தர அனுபவங்கள் கிடைக்கும் தகவல் மையமாக இது அமையும்.

"Airtel Lankatpy" எங்களின் வாடிக்கையாளர்களுக்கு மதிப்பை அதிகரிப்பதற்கான புதிய வழிகளை நாங்கள் தொடர்ந்து தேடுகிறோம். எங்களின் Physical Network உள்கட்டமைப்பில் முதலீடு செய்வதோடு, Airtel வாடிக்கையாளர்களுக்கு நாங்கள் வழங்கக்கூடிய மதிப்பை மேலும் மேம்படுத்த, Tech-Telco சுற்றுச்சூழல் அமைப்பில் உள்ள மற்றவர்களுடன் உத்திரீதியாக பங்குதாரர்களாகவும் ஒத்துழைக்கவும் நாங்கள் ஆர்வமாக உள்ளோம்.

# உலக கல்வி மாநாடு-2024




2024 மாநாடு, உலகெங்கிலும் உள்ள மாணவர்களுக்கான கல்வி அனுபவத்தை மேம்படுத்த, கல்வியாளர்கள் மற்றும் தீர்மானங்களை மேற்கொள்வோருக்குத் தேவையான உத்திகளை வழங்குகிறது. இந்த மாநாட்டில் இலங்கையிலிருந்து 4 பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

உங்கள் பாடத்திட்டத்தை வளப்படுத்துதல்" என்ற கருப்பொருளில், 2024 மாநாடு உலகெங்கிலும் உள்ள கல்வி நிபுணர்களுக்கு தலைமைத்துவம், நல்வாழ்வு, பாதுகாப்பு, அணுகுமுறைகள் மற்றும் டிஜிட்டல் கற்றலில் தொழில்நுட்பத்தை ஒருங்கிணைப்பதில் புதுமைகள் மற்றும் ஆய்வுகளை முன்வைத்தது.

இம்மாநாடு பாடத்திட்டத்தை உருவாக்குவதற்கும் வழங்குவதற்கும் பாடசாலை சமூகத்தில் உள்ள பாட நிபுணர்களை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தியது

பிரிட்டிஷ் கவுன்சிலின் பாடசாலைகள் இப்போது! 2024 பிப்ரவரி 27 முதல் 29 வரை தென்னாப்பிரிக்காவின் கேப் டவுனில் மூன்று நாட்கள் நடைபெற்றது.

இந்த மாநாட்டில் 1000க்கும் மேற்பட்ட பள்ளித் தலைவர்கள் நேரடியாகவும் மற்றும் மெய்நிகராகவும் கலந்து கொண்டனர், மேலும் சர்வதேசக் கல்வியில் சிறந்த நடைமுறைகள் மற்றும் நுண்ணறிவுகளைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒரு தளமாகவும் இது செயல்பட்டது.

இலங்கையில் இருந்து, பிரிட்டிஷ் கவுன்சில், எலிசபெத் மோயர் பள்ளி, புனித தோமஸ் கத்தோலிக்க சர்வதேச கல்லூரி, மற்றும் பெண்கள் கல்லூரி உள்ளிட்ட பாடசாலைகளின் 4 பிரதிநிதிகள் மாநாட்டில் கலந்து கொண்டனர்.

# பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டத்துடன் பசுமைப் புரட்சியை ஏற்படுத்தும் Adani

பசுமையான நாளையை நோக்கிய ஒரு சிறந்த முன்னேற்றத்திற்காக, Adani Green Energy (Sri Lanka) Limited அதன் 355 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கூடிய முக்கிய திட்டமான, இலங்கையின் அழகிய வட மாகாணத்தின், 234ஆறு பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டத்திற்கு, இலங்கை நிலைபேறான வலுசக்தி அதிகாரசபை (SLSEA) தனது அனுமதியை வழங்கியுள்ளது.

இந்த முக்கிய திட்டமானது, இலங்கையின் மிகப்பெரிய ஒரே அமைவிடத்தில் அமையும் காற்றாலை மின்சக்தி திட்டமாக அமைவதோடு மட்டுமல்லாமல், மின்சக்தி நெருக்கடி, பொருளாதார, சூழல் நிலைபேறான தன்மை போன்ற முக்கியமான பிரச்சினைகளுக்கும் தீர்வு காணும் வகையில் புதுப்பிக்கத்தக்க வலுசக்தியின் ஆதிக்கத்தை ஏற்படுத்துவதற்கான புதிய சகாப்தத்தை நோக்கியதாக அமையவுள்ளது.

இந்த 355 மில்லியன் டொலர் முதலீட்டுடன் கூடிய, 234ஆறு, பூநகரிரி காற்றாலை மின்சக்தி திட்டமானது, Adani Green Energy நிறுவனத்தின், நிலைபேறான தீர்வுகளை வழங்குவதற்கான உறுதியான அர்ப்பணிப்புக்கு சான்றாக அமைகிறது.

இந்த மகத்தான திட்டமானது, ஒரே இடத்தில் அமையப் பெறும் இலங்கையின் மிகப்பெரிய காற்றாலை மின்சக்தி திட்டமாக, அதன் அந்தஸ்தை உயர்த்துவதோடு மட்டுமல்லாமல், வலுசக்தி பாதுகாப்பு, பொருளாதார மறுசீரமைப்பு, சூழல் பாதுகாப்பு போன்ற முக்கியமான பிரச்சினைகளையும் நிவர்த்தி செய்கின்ற, நம்பிக்கையின் கலங்கரை விளக்கமாக அமைகிறது.

புதுப்பிக்கத்தக்க வலுசக்தியை மேம்படுத்தி, காபன் வெளியேற்றத்தைக் குறைத்தல்:

பூநகரி காற்றாலை மின்சக்தி திட்டமானது, இப்பிராந்தியத்தில் நிலைபேறான வலுசக்தியின் முக்கிய புள்ளியாக மாற உள்ளது.

# ஸ்டைலான Shirtworks சூட்கள் அறிமுகம்



இலங்கையின் முன்னணி ஆடவர் ஆடை வர்த்தக நாமமான நுஅநசயடன, அதன் SWX பம்பலப்பிட்டி காட்சியறையை மீண்டும் திறந்து வைத்துள்ளதோடு, அதன் புகழ்பெற்ற ஞாசைவறழசமள வர்த்தகநாமத்தில் Bespoke சூட் தெரிவுகளை அறிமுகப்படுத்தியதன் மூலம் ஒப்பிட முடியாத, ஸ்டைலான தெரிவுகளை வழங்குவதற்கான அதன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

இந்த அற்புதமான மேம்படுத்தலானது, உயர் தரம் மற்றும் தனித்துவமான நேர்த்தியைத் தேடுகின்ற விவேகமுள்ள ஆண்களுக்கு உயர் அனுபவத்தை உறுதியளிக்கிறது.

நுஅநசயடன இன் விற்பனைப் பிரிவான Shirtworks (SWX) நீண்ட காலமாக நவீனத்துவ ஆடவர்களுக்கான புகலிடமாக இருந்து வருகிறது.

Class One> ED Array, Leonardo போன்ற சர்வதேச வர்த்தகாநாமங்களின் உயர்தர தெரிவுகளை அது வழங்குகிறது.

அதன் பாராட்டைப் பெற்ற ”Bespoke” பிரிவானது, மிகச்சிறந்த துணிகள் மற்றும் உலகத் தரம் வாய்ந்த வடிவமைப்புகள் மூலம் இந்த அனுபவத்தை மேலும் உயர்த்துகின்றது.

அதன் மீள் திறப்பு மற்றும் புதிய வெளியீடுகள் தொடர்பில் கருத்துத் தெரிவித்த Emerald International முகாமைத்துவ பணிப்பாளர் அஹமட் இக்ராம், “மீள் வடிவமைப்பு செய்யப்பட்ட SWX பம்பலப்பிட்டி காட்சியறையானது, ஆடவருக்கான ஆடம்பரமான ஆடைகளின் கொள்வனவை மீள்வரையறை செய்கிறது. சமகால சூழலுக்கு ஏற்ற, தனிப்பயனாக்கப்பட்ட சேவையுடன், தனிப்பட்ட விருப்பங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட Bespoke சூட் தெரிவுகள் போன்ற சமீபத்திய வெளியீடுகளை கொள்வனவு செய்வதற்கான சிறந்த பின்னணியுடன் இக்காட்சியறை வடிவமைக்கப்பட்டுள்ளது.” என்றார்.



# கல்விக் கடன் திட்டம் அறிமுகம்

DFCC வங்கி, இலங்கையில் தாதியர் துறையில் நிபுணத்துவத்துடன், சுகாதாரக் கல்விக்கான முன்னணி நிறுவனமும், லண்டன் Coventry பல்கலைக்கழகத்துடன் இணைந்த நிறுவனமுமான International Institute of Health Sciences (IIHS) உடன் புதிய முக்கியத்துவம் வாய்ந்த கூட்டாண்மையை அறிவித்துள்ளது.

இப்புதிய கூட்டாண்மையின் கீழ், DFCC வங்கி IIHS மாணவர்களுக்கு பல்வேறு தனித்துவமான சலுகைகளுடன் கல்விக் கடன்களை கவர்ச்சிகரமான வட்டி வீதத்துடன் வழங்கும்.

இந்த சலுகைகளில் 100% வரையிலான பாடநெறிக்கான கடன், 7 ஆண்டுகள் வரை நீட்டிக்கப்பட்ட மீளச் செலுத்தும் காலம் மற்றும் அதிகபட்ச சௌகரியத்திற்காக நேரடியாக இருக்கும் இடத்திற்கே கிடைக்கப்பெறும் சேவை ஆகியவை அடங்கும்.

DFCC வங்கியின் இந்த கவர்ச்சிகரமான திட்டமானது, IIHS தனது பல்வேறு கற்கைநெறிகளுக்கு புதிதாக மாணவர்களை உள்வாங்குவதற்குத் தயாராகி வரும் நிலையில் பொருத்தமானதொரு தருணத்தில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தாதியியல் துறையில் இலங்கையில் நிறைவுசெய்யக்கூடிய உலகளாவிய ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட BSc (Hons) பட்டப்படிப்புக்களும் அவற்றுள் அடங்கியுள்ளன.

# Coventry University மற்றும் IIHS இணைவு



இலங்கையின் சுகாதாரக் கல்வியின் முன்னோடியான International Institute of Health Sciences (IIHS) நிறுவனம் ஐக்கிய இராச்சியத்தின் Coventry பல்கலைக்கழகத்துடன் இணைந்து தெற்காசியாவில் முதல் தடவையாக MSc Nursing, MSc Digital Health மற்றும் MBA in Healthcare Administration எனும் பட்டப்படிப்பு பாடநெறியை அறிமுகப்படுத்தியுள்ளது.

சிறப்பு மருத்துவ நிபுணர் கித்சிறி எதிரிசிங்க அவர்களின் தலைமையில் IIHS நிறுவனம் உள்நாட்டு மற்றும் சர்வதேச ரீதியாக 3,000 இற்கும் மேற்பட்ட சுகாதார வல்லுநர்களை உருவாக்கியுள்ளது.

IIHS நிறுவனம் அங்கு கல்வி கற்கின்ற மாணவர்களுக்கு இத் துறையில் நீடித்த அனுபவமுடைய வல்லுநர்களின் கீழ் உயர் மட்டத்திலான கல்வி வசதிகளை உறுதிப்படுத்துவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வருகின்றது.

“IIHS நிறுவனத்துக்கும் Coventry பல்கலைக்கழகத்துக்குமிடையிலான இந்த ஒத்துழைப்பு உடன்படிக்கை ஈடு இணையற்ற கல்வி வாய்ப்புகளை உருவாக்குவதற்கு நாம் கொண்டுள்ள அர்ப்பணிப்பை மேலும் உறுதிப்படுத்துகிறது.

மேற்படி கற்கை பாடநெறிகளை கற்பதற்கு மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கும் தெற்காசியாவின் ஒரே கல்வி நிறுவனம் IIHS நிறுவனம் ஆகும். நவீன தொழில்நுட்பம் மற்றும் கல்வியின் புதிய அம்சங்கள் தொடர்பாக ஆர்வங்கொண்டுள்ள நாம் மாணவர்களுக்கு மகத்தான அனுபவங்களை வழங்குவதற்கு எப்பொழுதும் முயற்சிக்கின்றோம்.” என டாக்டர் எதிரிசிங்க தெரிவித்தார்.

# INSEE Cementஇற்கு விருது இலங்கையின் முதற்தர சீமெந்து

வர்த்தகநாமமான INSEE Cement, அண்மையில் கொழும்பிலுள்ள Courtyard by Marriott ஹோட்டலில் நடாத்திய வருடாந்த வணிகக் கூட்டாளர் விருதுகள் 2023 நிகழ்வில் தனது வணிகக் கூட்டாளர்களின் மிகச் சிறந்த சாதனைகளை பெருமையுடன் போற்றிக் கௌரவித்துள்ளது.

"Unbreakable bonds, Unstoppable journey, முரச ளவசநபெவா, INSEE" என்ற தொனிப்பொருளில் இடம்பெற்ற இந்த ஆண்டு நிகழ்வில் கடந்த ஆண்டில் கட்டுமான துறை முகம்கொடுத்த மிகக் கடுமையான சவால்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கும் வகையில் இத்தொனிப்பொருள் அமைந்தது.

தரமான உற்பத்திகள் மற்றும் சேவைகள், குறித்த காலத்தில் இடம்பெறும் விநியோகம், பொறுப்புக் கூறும் வகையிலான உதவி சேவை ஆகியவற்றினூடாக எமது வாடிக்கையாளர்களுக்கு பெறுமதியை வழங்கி, INSEE Cement நிறுவனம் தொடர்ச்சியாக தனது சேவையை வழங்குவதற்கு உதவிய எமது வணிக கூட்டாளர்களின் விலைமதிப்பற்ற பங்களிப்புகளை அங்கீகரிக்கும் வகையில் இந்நிகழ்வு இடம்பெற்றுள்ளது.

2023 வணிக கூட்டாளர் விருதுகள் நிகழ்வில் பணிப்பாளர் சபை தலைவர் சந்தன ஏக்கநாயக்க பிரதம நிறைவேற்று அதிகாரி ஜான் குனிக் நிறைவேற்றுச் சபை, முகாமைத்துவம் மற்றும் வர்த்தக அணியின் அங்கத்தவர்கள், அத்துடன் நிகழ்வுக்காக அழைக்கப்பட்ட எமது பிராந்திய மற்றும் தேசிய வணிக கூட்டாளர்கள் இந்நிகழ்வில் கலந்து சிறப்பித்தனர்.

INSEE Cement நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜான் குனிக் அவர்கள் நிறுவனத்தின் தொடர்ச்சியான வாடிக்கையாளர்களை மையப்படுத்திய அணுகுமுறைக்கு வணிக கூட்டாளர்கள் ஆற்றியுள்ள முக்கியமான வகிபாகம் குறித்து நிகழ்வில் கருத்து வெளியிடுகையில் “கூட்டாளர்களின் வலுவான ஆதரவு, கடந்த ஆண்டில் காணப்பட்ட சவால்களை முறியடித்து,இ தலைசிறந்த தயாரிப்புகள் மற்றும் சேவைகள் ஊடாக எமது வழங்கலை விரிவுபடுத்துவதற்கு INSEE Cement நிறுவனம் ஆற்றலைப் பெறுவதற்கு முக்கிய காரணமாக அமைந்துள்ளது,” என்று குறிப்பிட்டார்.

# உருக்கு கம்பிகள் அறிமுகம்

இலங்கையின் முதன்மையான மற்றும் முன்னோடியான துருப்பிடித்தலிலிருந்து பாதுகாக்கப்பட்ட, கல்வனைஸ் செய்யப்பட்ட உருக்கு கம்பி உற்பத்தியாளரான Lanka Special Steels Limited நிறுவனம், 25 ஆண்டுகளுக்கும் மேலான செழுமையான வரலாற்றைக் கொண்டுள்ளது

அதன் முதன்மையான சர்வதேச கம்பி வர்த்தகநாமங்களான “Lanka Special Steels Ltd Poultry 300” மற்றும் “Lanka Special Steels Ltd Premium 100” ஆகியவற்றை அறிமுகப்படுத்துவது தொடர்பில் அண்மையில் அறிவித்துள்ளது.

இந்த உயர்தர தயாரிப்புகள் முறையே கோழிப் பண்ணைத் தொழிலில் பயன்படுத்தவும், பொதுவான வேலி தேவைகளுக்காகவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. Lanka Special Steels நிறுவனம் இந்த தயாரிப்புகளை இந்திய சந்தைக்காக அறிமுகப்படுத்துவதுடன், இந்த தேவைப்பாடுகள் ஒரு சில உயர்தர தீர்வுகளைக் கொண்ட முக்கிய சந்தைகளின் பயன்பாட்டுக்காக அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

Lanka Special Steels Limited மற்றும் இந்திய விநியோகஸ்தரான Salem Weld Mesh ஆகிய இரு நிறுவனங்களின் அதிகாரிகள் கலந்துகொண்ட இந்த நிகழ்வைக் குறிக்கும் வகையில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில், இந்த புதிய உயர்தர துருப்பிடித்தலைத் தடுக்கும், கல்வனைஸ் செய்யப்பட்ட உருக்கு கம்பி தயாரிப்புகள் தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டன.

இந்தக் குழுவில், Lanka Special Steels இன் பணிப்பாளரும், பிரதம நிறைவேற்று அதிகாரியுமான திரு. பிரவின் டி சில்வா, Salem Weld mesh




இன் முகாமைத்துவப் பணிப்பாளரான திரு. ஆர். நடராஜன் மற்றும் Lanka Special Steels Ltd நிறுவனத்தின் விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் பிரிவின் தலைவர் கயான் பத்திநாயக்க ஆகியோரும் அடங்கியிருந்தனர்.